# வைணவ சமய அறநூல்களில் கல்வி போதனை நிலைப்பாடு

*செல்வன் மு. ஜெயசூரியா*
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783425

**முன்னுரை**

*தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் சங்க இலக்கியங்களுக்கு பிறகு தோன்றிய சங்க மருவியகால இலக்கியங்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முதன்மைப் பெறுகின்றன. குறிப்பாக அதில் உள்ள அற நூல்களே அக்கால மக்களின் நிலைப்பாட்டை அறம் கூறுவதன் வழி விளக்குகின்றதை அறிய முடிகின்றது. அவ்வகையில் வைணவ சமயத்தை முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்ட இரு அற நூல்களில் கல்வி சார்ந்த சிந்தனைப் போக்கு என்பது எப்படி அமைந்துள்ளது என்பதை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**நான்மணிக்கடிகையில் கல்வி**

*விளம்பிநாகனாரால் எழுதப்பட்ட நான்மணிக்கடிகையில் 104 பாடல்களில் அறம் கூறப்பட்டுள்ளது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூலில் அக்காலச் சமூகத்தில் நிலவிய பண்பாட்டுச் சூழலை மையமிட்டு அறக்கருத்துக்கள் பாடப்பட்டுள்ளன. ஒரு மனிதனின் ஆளுமை என்பது அவன் கற்கின்ற நூல்களின் தன்மையைப் பொறுத்தே அமைகின்றது. அறிவு வளர்ச்சி தரும் நூல்களைப் படிப்பதால் மனிதனிடத்தில் இருக்கும் அறியாமையானது நீங்குகின்றது. அறியாமையை நீக்கினால், அற்பமான கீழ்மை சிந்தனைகள் நீங்கும், இதனால் இவ்வுலகின் உண்மையான இயல்பினை மனிதர் அறிவர். இதன்பொருட்டு உண்மையான அருள் நெறியில் செல்வான் இவன். இத்தொடர் செயல்பாடுகள் அம்மனிதனின் புகழினை நிலைநாட்டி மறுமையால் உயர்ந்த வீட்டுலகம் அடைவான்.*

**'கற்பக் கழிமடம் அஃகும், மடம் அஃகப்**
**உயர்ந்த உலகம் புகும்'**[1]

*ஒருவன் தான் கற்கின்ற கல்வியின் துணை கொண்டு பல்வேறு சாதனைகளை ஆற்றுகின்றான். அதனால்தான் அறிவினைத் தருகின்ற கல்வியினை அழிவு வராமல் தடுக்கும் கருவியாகவும் பகைவர்கள் யார் வந்தாலும் அழித்துவிட இயலாத உள்ளிருந்து நம்மைக் காக்கும் ஓர் அரணாகவும் அறிவாகிய கல்வி செயல்படுகின்றது என்று வள்ளுவரும் கூறியிருக்கின்றார்.*

**"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்"**[2]

*பல்வேறு அற நூல்களில் கற்றோரை அவரைப்போன்றகல்விஅறிவுபெற்றவர்தான் விரும்புவர் என்று கூறப்பட்டுள்ளது. அதே செய்தி நான்மணிக்கடிகையிலும் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி அக்காலச் சூழலில் கற்றோர் பெற்றிருந்த மதிப்பினைக் காட்டுகின்றது. மேலும், கற்றோர் கல்வி கற்காதவர்களை ஒதுக்கி இருக்கின்றனர் என்பதும் இக்கருத்தின் வழி அறியலாகின்றது. அதுமட்டுமன்றி ஒரு குடியினில் படிக்காத ஒருவன் வயதில் பெரியவராக இருப்பினும், அவரைமதிக்காமல், அதே குடியினில் பிறந்த வயதில் குறைந்த இளையவனாக இருப்பவன் கல்வி கற்றிருந்தால் அவனை மதித்துப் பாராட்டுவர் எனும் செய்தி சமூகத்தில் வயதில் மூத்தோருக்கு கொடுத்த மதிப்பினைவிட கல்வி கற்று சிறந்து விளங்கிய இளையோராக இருந்தவர்களுக்கும் மதிப்பளித்தனர் என்பதைச் சுட்டுகிறது.*

**'கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்**
**இளமை பாராட்டும் உலகு'**[3]

ஒருவன் கல்விகற்று சிறக்க வேண்டுமெனில், அவன் இளம் பருவத்திலேயே கல்வியினைக் கற்க வேண்டும். அச்செய்தினை இளம்பிள்ளைகளை நோக்கி ஆத்திச்சூடி,

**"இளமையில் கல்"**[4]

என்று குறிப்பிடுகிறது. கற்பதற்கான சரியான பருவம் இளமைப்பருவமே என்கிறார் ஔவையார். கல்விகற்ற ஒருவர் தாம் பேசுகின்ற சொற்களை நல்ல சொற்களாக ஆராய்ந்து பேசுவர். ஆனால், கல்வி கற்காத ஒருவர் பேசும் சொற்களே அவனுக்குத் தீமையினை ஏற்படுத்திவிடும் இயல்புடையதாகும். ஆதனால், குழந்தைகளைக் கல்வி கற்காமல் வளரவிடுதல் என்பது துன்பம் தரும் செயலாகக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயலுக்குமான காலகட்டம் உள்ளது. அவ்வகையில் இளம் பருவமே கல்வி கற்பதற்கான பருவம் என்று நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ளது.

அன்பில்லாதவன் வாயிலிருந்து பழிச்சொற்கள் தோன்றும். அறிவு நூல்களைக் கற்றவனின் வாயிலிருந்து வஞ்சனை பொருந்திய சொற்கள் ஒருபோதும் தோன்றாது. கல்வி கற்க ஒருவன் ஏதாவது ஒன்றில் தளர்ந்தால் எப்படியாவது அவன் அதிலிருந்து மீண்டெழுவான். ஆனால், கல்வி கல்லாதவன் இடையிலேயே தளர்ச்சி அடைவான். ஒருவன் ஒருபிறவியில் செய்த எல்லாம் மறுபிறவியில் அனுபவிக்க உரியவைகளாகும். ஆதலால், மெய்யறிவினைக் கொண்டு நற்செயல்களைக் கல்வியின் துணைகொண்டு ஆற்றுங்கள் என்பதும் கல்வியின் மேன்மையினைக் காட்டுகின்றது.

**"கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத**
**பொய்யா வித்தாகி விடும்"**[5]

என்ற நான்மணிக்கடிகை பாடலில் கல்வி சார்ந்த சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## திரிகடுகத்தில் கல்வி

நல்லாதனாரால் இயற்றப்பட்ட அறநூல் திரிகடுகம். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருட்களும் உடல் நோயினைத் தீர்ப்பது போல அதில் கூறப்பட்டுள்ள மூன்று மணியான கருத்துகள் மனிதர்களின் அறியாமையாகிய உள்ளப்பிணியைப் போக்கி அறநெறியின்படி வாழ உதவுகின்றது. ஒருவர் கற்கின்ற கல்வியானது அந்த நபரின் வாழ்வில் பல்வேறு சூழல்களிலும் உதவக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வகையில் முதுமை வந்தபோதும் துறவறம் மேற்கொள்வதற்கு அச்சம் கொண்டு அகன்றவனும், கற்புடைய மனைவியைப் புப்பு கொண்டு நீராடிய பின்பு தழுவாதவனும் வாய்ச்சொல்லால் பகைவரை வெல்ல எண்ணும் துறவி ஆகிய மூவரும் கல்வி என்னும் தோணியைக் கைவிட்டவர்களாவர். மேற்புறப்பட்ட மூன்று செயல்களையும் முறையாகச் செய்வதே கல்வி கற்றவர்களுக்கான குணமாகும்.

**"மூப்பின்கண் நன்மைக்கு அகன்றாலும் கற்புடையாள்**
**கல்விப் புணைகைவிட் டார்"**[6]

திரிகடுகம் எழுதப்பட்ட காலகட்டத்தில் கற்றோருக்கான சிறப்பு மக்கள் மத்தியில் மிகுந்திருந்தது. பெரியோர்களை மதிக்காமல் செருக்குடன் வாழும் அற்ப அறிவுடையோர்களிடம் கல்வியினைக் கற்றவர்கள் உணவினை வாங்கி உண்ணமாட்டார்கள். பெண்கள் தங்கள் உடலைவிலைகூறிவிற்பவர்களாக இருப்பின், அவர்கள் கொடுக்கும் உணவினையும் கல்வி கற்றோர் வாங்கி உண்ண மாட்டார்கள். உலக இன்பத்தைத் துறந்த துறவிகளின் நலனுக்காக அமைத்த அறச்சாலைகளை அழித்தவனிடம் கல்விக் கற்றார் உணவு பெற்று உண்ணார் எனும் செய்தி அக்காலச் சூழலை அடையாளப்படுத்துகிறது. சிலரிடம் உணவினைப் பெற்று உண்ணாமல் இருப்பது பாவமாகக் கருதப்படும். சில செயல்களைச் செய்யும் நபர்களிடமிருந்து உணவினைப் பெற்று உண்ணாமல், நன்மையினைச் செய்யும் நபர்களின் உணவே கற்றோரால் உண்ணப்பட்டு இருக்கின்றது. இச்செய்தி கல்வி கற்றோரின் மேன்மையினை உணர்த்துவதாக உள்ளது.

**"செருக்கினால் வாழும் சிறியவனும் பைத்து அகன்ற.**
**கைதுண்ணார் கற்றறிந்தார்"**[7]

நூல்களில் உள்ள நுட்பமான செய்திகளை ஆராய்ந்து தெளிவாகப் பொருளினை உணர்த்தும் நூற்களுக்குப் பொருத்தமில்லாத சொற்களைப் பிறர் விரும்பினாலும் கூறக்கூடாது. பயனுள்ள நல்ல சொற்களைச் சிறுமைக்குணம் இல்லாதவர்க்கு கூறுதலும் ஆகிய இவ்விரண்டும் சிறந்த முறையில் கல்வி கற்றறிந்தவர்களின் கடன் ஆகும். கல்வி கற்பதன் நோக்கமே அறமுடையவர்களாகவும், பகுத்தறிந்து செயல்படுத்துதலுக்கான ஆற்றலைப் பெறவும் தான். அவ்வாறு மாணவர்களாக இருக்கும் பொழுதே சிறப்பான முறையில் கல்வியினைக் கற்று தெளிதல் அவசியமாகிறது.

**"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்**
**கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்"**[8]

நல்ல மாணவன் என்பவன் ஆசிரியன் கற்பித்தவற்றைத் தன் அறிவோடு பொருந்தக் கற்றான் ஆயினும் கால்பங்கு புலமையை மட்டுமே பெறுவான். தான் பெற்ற அறிவினை அதிகரிக்க வேண்டும் எனில் தன் சக மாணவர்களுடன் தனது பாடம் குறித்துக் கலந்துரையாடல் செய்வதன் வழி கால் பாகம் அறிவினைப் பெறுவான். மீதமுள்ள அரைப்பங்கு அறிவினைத் தன்னோடு கல்வி கற்கக்கூடியவர்களுக்கும் பிறருக்கும் எடுத்துரைப்பதால் பெறுவான். அக்கருத்தானது மாணவனுக்கு மட்டுமன்றிக் கல்வியினைக் கற்ற அறிவுடையோனும் தான் கற்ற கல்வியின் பலனாக அதனைத் தன்னுடைய செயலில் செயல்படுத்துவதுடன் தன்னைச் சுற்றி உள்ள சான்றோருக்கும் கல்லாதவருக்கும் கூறுவதன் வழி அறிவினைப் பெருக்கிக் கொள்வான்.

ஆசிரியர் என்பவர் மாணாக்கர் மீது எப்பொழுதும் கோபம் கொள்ளக் கூடியவராக இருக்கக் கூடாது. அவ்வாறு கோபம் கொள்பவரின் பள்ளியினை அறிவுடையோர் விரும்பி சேர மாட்டார்கள். ஆசிரியன் என்பவன் மானக்கர்களை அன்புடன் அணுகக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எழுத்து, சொல்லுக்கு இலக்கணம் கூறி பவணந்தி முனிவர் நல்லாசிரியருக்கான இலக்கணத்தைக் கூறுகிறார். அதில் நற்குடியில் பிறத்தல், இரக்க உணர்வு, தெய்வ வழிபாடு, பெருந்தன்மை, பல நூல்களைக் கற்று தெளிந்த அறிவு, சுவைபடவும் தெளிவாகவும் விளக்கும் சொல்லாற்றல், நிலம், மழை, நிறைகோல், மலர் என்பவற்றை ஒத்த சிறந்த குணங்கள் உடைமை, காலத்திற்கு ஏற்பச் சிந்திக்கும் ஆற்றல் இவற்றைப் போன்ற பிற உயர்ந்த குணங்களைப் பெற்றவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். இழிவான குணம் உடையவர் ஆசிரியர் எனும் தகுதிக்கு உரியவராகக் கருதப்படமாட்டார்.

**"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**அமைப்பவன் நூல்உரை யாசிரியன்னே"**[9]

இவ்வாறு நல்லாசிரியருக்கான இலக்கணம் கூறிய பவணந்தி முனிவர் நல்லாசிரியர் ஆகாதாருக்கான இலக்கணத்தையும் கூறுகின்றார். கல்வி கற்பிக்கும் ஆற்றல் இல்லாமை, இழிந்த குணங்களைக் கொண்டு இருத்தல், பொறாமை, பேராசை, வஞ்சகம் உடைமை, மாணவர்களைக் கண்டு தான் அஞ்சுதல், தன்னைக் கண்டு மாணவர்கள் அஞ்சம்படிப் பேசுதல், கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு போன்ற மாறுபட்ட இயல்புடையவர் ஆசிரியர் ஆகாதவராவர்.

## முடிவுரை

தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் அறத்தை மட்டும் மையப்பாடுபொருளாகக் கொண்டு உருவான சங்கம் மருவிய கால இலக்கியங்களில் உள்ள பதினொன்று அற நூல்களிலும் கல்வி பற்றிய சிந்தனைகள் உள்ளன.

சமூகம் மதிப்பு என்பது அவரிடத்தில் உள்ள செல்வம், புகழ், குடியிருப்பு போன்றவற்றால் கிடைப்பதல்ல. அம்மதிப்பினை தருவது அவர் கற்ற கல்வியே என்பதை அறநூல்களின் வழி அறியலாகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. பத்மதேவன்-தமிழ்ப்பிரியன், (உ.ஆ) நீதிநூல் களஞ்சியம், நான்மணிகடிகை, பா.எ.28.
2. நாராயணவேலுப்பிள்ளை. எம், (உ.ஆ.), திருக்குறள், கு.எ. 42.
3. பத்மதேவன் - தமிழ்ப்பிரியன், (உ.ஆ) நீதி நூல் களஞ்சியம், நான்மணிக்கடிகை, பா.எ.64.
4. மேலது. ஆத்திச்சூடி, பா.எ.29.
5. மேலது. நான்மணிக்கடிகை, பா.எ.73.
6. மேலது. திரிகடுகம், பா.எ.17.
7. மேலது. பா.எ.25.
8. திருஞானசம்பந்தம். ச, நன்னூல் எழுத்ததிகாரம், நூ.எ.44.
9. மேலது. நூ.எ.26.

**துணைநூற் பட்டியல்**


1. பத்மதேவன் - தமிழ்ப்பிரியன் - நீதிநூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, சென்னை-17, மு.ப-2013.
2. நாராயண வேலுப்பிள்ளை. எம். (உ.ஆ) - திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை -17, இ.ப-2015.
3. திருஞானசம்பந்தம். ச(உ.ஆ) - நன்னூல் எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, மு.ப.2014.